பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

12 08 2026 WEDNESDAY 7 15 PM ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழக சட்டத்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

2. விண்வெளி தொழில்நுட்பத்துறையில் இதுவரை 440 புத்தாக்க தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

3. தேசிய செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாட்டு இயக்கத்தின் முதற்கட்டமாக, 60 ஆயிரத்து 253 பேர் பதிவு செய்திருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் வாகனம் ஆற்றில் கவிழ்ந்ததில், பெண்கள், குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.

5. காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<

தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழக சட்டத்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா, இன்று மாநிலங்களவையிலும் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, இதனை தாக்கல் செய்து பேசிய கூட்டுறவுத்துறை இணையமைச்சர் திரு. Muralidhar Mohol, தொழில்துறையில் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் ஈடுபடுவதற்கு இந்த மசோதா வழிவகை செய்கிறது என்று தெரிவித்தார்.

எந்தவொரு கூட்டுறவு சங்கம் அல்லது, கூட்டுறவு மேம்பாட்டில் ஈடுபடும் அமைப்புகளுக்கு இந்த கூட்டுறவுக் கழகத்தின் மூலம் கடனுதவி மற்றும் மானியம் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இம்மசோதா நிறைவேற்றப்படுவதன் மூலம், விவசாயிகளுக்கு பொருளாதார ரீதியிலான அதிகாரம் வலுபெறும் என்றும் திரு. Muralidhar Mohol தெரிவித்தார்.

இம்மசோதா மீதான விவாதத்தில் பேசிய பிஜேபி உறுப்பினர் டாக்டர் ராம்ராவ், மத்திய அரசு கூட்டுறவு துறையை மேம்படுத்துவதற்கு எடுத்து வரும் முயற்சிகளை பாராட்டினார்.

இம்மசோதாவுக்கு பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

ஐக்கிய ஜனதா தளம், YSR காங்கிரஸ், தெலுகு தேசம் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

திமுக, அஇஅதிமுக, தேமுதிக கட்சிகளின் உறுப்பினர்களும் விவாதத்தில் கலந்து கொண்டு பேசினர்.

>>>>>><<<<

விண்வெளி தொழில்நுட்பத்துறையில் இதுவரை 440 புத்தாக்க தொழில் நிறுவனங்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று எழுத்துபூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், இதற்கான அரசு அங்கீகாரத்தை வழங்கும் IN-SPACe அமைப்பு, 52 நிறுவனங்களுக்கு 113 அனுமதிகளை வழங்கியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதில் 18 அரசுசாரா நிறுவனங்களும் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்வெளித் துறையை தாராளமயமாக்கும் முயற்சிகளை மத்திய அரசு முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

செயற்கைக்கோள் தயாரிப்பில் புத்தாக்க நிறுவனங்களை ஊக்குவித்தல், செயற்கைக்கோளை ஏவுவதற்கான சேவைகள் உள்ளிட்டவைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரோவின் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, புத்தாக்க நிறுவனங்கள் விண்வெளி தொழில்நுட்ப முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

தேசிய செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாட்டு இயக்கத்தின் முதற்கட்டமாக, 60 ஆயிரத்து 253 பேர் பதிவு செய்திருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று அவர் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில், 46 ஆயிரத்து 20 பேர் முதற்கட்டத்தில் இரண்டு பயிற்சிகளையும், 552 பேர் 4 பயிற்சிகளையும் முடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த 4 பயிற்சிகளும் 33 மணி நேரம் அளிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இரண்டாவது கட்ட செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாட்டு இயக்கத்தை தனியார் துறையுடன் இணைந்து மேற்கொள்வதற்கு, முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

டாக்டர் அம்பேத்கர் கலப்பு திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், 457 பயனாளிகளுக்கு 10 கோடியே 66 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக சமூகநீதி மற்றும் அதிகாரமயமாக்கல் துறை இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் அவர் இன்று அளித்த எழுத்துபூர்வமான பதிலில், 2023-24ஆம் ஆண்டில் 68 பேருக்கும், 2024-25ஆம் நிதியாண்டில் 11 பேருக்கும், 2025-26ஆம் ஆண்டில் 378 பேருக்கும் இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் மூலம், இந்த நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் திரு. ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

>>>>><<<<

ரயில்வேக்கான மேம்படுத்தப்பட்ட நான்காவது கவாச் தானியங்கி பாதுகாப்பு கட்டமைப்பை, வடகிழக்கு ரயில்வேயின் Izzatnagar கோட்டத்தில் அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

295 கோடி ரூபாய் செலவில் 660 கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த தானியங்கி பாதுகாப்பு கட்டமைப்பு அமைக்கப்படும்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கவாச் பாதுகாப்பு கட்டைமைப்பின் மூலம், ரயில்வே சிக்னல்கள் தானாகவே இயக்கப்படும். எதிரே வரும் ரயில் எந்த தடத்தில் வருகிறது என்பதை துல்லியமாக கண்காணிப்பதற்கும் இந்த கட்டமைப்பு உதவிடும்.

பாதுகாப்பு காரணங்களுக்காக ரயில்களை தானாகவே நிறுத்துவதற்கும் கவாச் கட்டமைப்பில் வகை செய்யப்பட்டுள்ளது.

மோசமான வானிலை, குறிப்பாக – கடும் மேகமூட்டம் நிலவும் சூழ்நிலைகளில் பாதுகாப்பாக ரயிலை இயக்குவதற்கும் இது பயன்படுகிறது.

>>>>><<<<

*அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து, உண்மைக்கு புறம்பான தகவல்களை, ஊடகங்கள் மூலம் பரப்பப்படுவதை தடுப்பதற்கு, பத்திரிகை தகவல் அலுவலகம், உண்மை கண்டறியும் பிரிவை அமைத்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*மக்களவையில் இன்று அவர் அளித்த எழுத்துபூர்வமான பதிலில், உண்மை கண்டறியும் பிரிவில் உள்ள அலுவலர்கள், அரசின் பல்வேறு துறைகள், அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசு சார்ந்த அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த உண்மையான தகவல்களை இணையதளங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு தெரிவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.*

*தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பாகும் செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் சரியான தகவல்களை மக்களுக்கு அளித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.*

*உண்மைக்கு புறம்பாக பரப்பப்படும் தகவல்களுக்கு மாற்றாக, சரியான தகவல்களை மக்களுக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*பத்திரிகை தகவல் அலுவலகம், அரசின் ஊடகப் பிரிவுகளை ஒருங்கிணைத்து இப்பணிகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.*

*பொதுமக்களுக்கான தகவல் சேவையை பிரஸார் பாரதி சிறப்பாக செய்து வருவதாகவும் டாக்டர் எல். முருகன் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>><<<<*

*இலங்கையில் சிறுதானிய பயன்பாடு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும், மதிப்புகூட்டப்பட்ட சிறுதானிய பொருட்களை மேம்படுத்துவது குறித்தும், தென்னிந்தியாவுக்கான இலங்கை துணைத் தூதர் டாக்டர் கணேசநாதன் கேதீஷ்வரன், விருதுநகர் மாவட்டம், சின்னத்தாதம்பட்டியில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.*

*பின்னர் எமது செய்தியாளரிடம் பேசிய அவர், சிறுதானிய சாகுபடியை ஊக்குவிக்கும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - கணேசநாதன் 30 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<*

*பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் வாகனம் ஒன்று ஆற்றில் கவிழ்ந்ததில், பெண்கள், குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர்.*

*Muzaffargardh மாவட்டத்தில் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக 26 பேர் பயணம் செய்த இந்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் விழுந்ததாக காவல்துறை தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<*

*கேரளத்தில் உள்ள முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு மற்றும் தற்போதைய நிலை குறித்து, ஐந்து உறுப்பினர்கள் கொண்ட துணைக்குழு இன்று ஆய்வு செய்தது.*

*முல்லைப்பெரியாறின் பெரிய மற்றும் சிறிய அணைகள் தனித்தனியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மதகுகளின் உறுதித்தன்மை, அணையின் திறன் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.*

*இந்த ஆய்வுக்குப் பின், குமளியில் இந்தக் குழுவினர் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.*

*>>>>>><<<<*

காமன்வெல்த் போட்டியில் 65 கிலோ பளு தூக்கும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற கோவில்பட்டியைச் சேர்ந்த ராஜா முத்துப்பாண்டியன், இன்று தூத்துக்குடி வந்த போது விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வது தமது லட்சியம் என்று கூறினார்.

(சவுண்ட் பைட் – முத்துப்பாண்டியன் 50 செகண்ட்ஸ்)

>>>>>><<<<

காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

நைஜீரியாவின் Lagos-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில், Karan Singh, Rajendran Shanthimol Sherjin மற்றும் Kanaga Lakshmi தங்கப்பதக்கம் வென்றனர்.

Joys Ashitha வெள்ளிப்பதக்கத்தையும், Kumaresan Padma Gasho Nidhi வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>><<<<

மலேசியாவுக்கு எதிரான 21 வயதுக்குட்பட்டோருக்கான நான்காவது ஹாக்கிப் போட்டியில் இந்தியா ஐந்துக்கு ஒன்று என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

பெங்களூருவில் இன்று நடைபெற்ற இப்போட்டியில் Prabhdeep Singh மற்றும் Ashu Mourya தலா இரண்டு கோல் அடித்தனர்.

>>>>END><<<<